//தனி கவனம் //

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண் 3865 /ஆ4/2023 நாள்.29.07.2024**

**பொருள் :** தேர்வுகள்–வேலூர் மாவட்டம் –மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு மார்ச் 2024 –அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் மாணவர்களுக்கு வழங்குவது தொடர்பான அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக

**பார்வை :** சென்னை அரசு தேர்வுகள் இயக்குநரின் 001912/ எப்.4 /2023 நாள் 29.07.2024

*********

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ஆணையின்படி மார்ச் 2024ல் நடைபெற்று முடிந்த மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு எழுதி மாணவர்களின் அசல் மதிப்பெண் பட்டியல் கீழ்க்காணும் அட்டவணையின்படி வழங்கப்படவுள்ளது.தங்கள் பள்ளியில் பயின்ற அனைத்து மாணவர்களின் அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ள சார்ந்த பள்ளி தலைமையாசிரியர், மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் முகப்புக் கடிதத்துடன் மாணவர்களின் எண்ணிக்கை விவரத்துடன் வருகை புரிந்து பெற்றுக்கொள்ளவேண்டும். அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ள அமைச்சுப்பணியாளர்களோ அல்லது அடிப்படை பணியாளர்களோ அனுப்ப கூடாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | நாள் | ஒன்றியம் | இடம் | நேரம் |
|---|---|---|---|---|
| 1 | 31.07.2024 | வேலூர் நகர் | ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சத்துவாச்சாரி,வேலூர். | காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரை |
| 2 | | வேலூர் புறநகர் | | |
| 3 | | கணியம்பாடி | | |
| 4 | | அணைக்கட்டு | | |
| 5 | | காட்பாடி | | காலை 11.00 மணி முதல் பிற்பகல் 12.00 மணி வரை |
| 6 | | குடியாத்தம் | | |
| 7 | | கே.வி.குப்பம் | | |
| 8 | | பேர்ணாம்பட்டு | | |

மேலும் அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் மாணவர்களுக்கு வழங்க தலைமை ஆசிரியர்கள் மேற்கொள்ள எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை சார்ந்த அறிவுரைகள் பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது . அக்கடிதத்தில் தெரிவித்துள்ள அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக்பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஓம்.செ.மணிமொழி //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
அனைத்து மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்:
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் பள்ளிகள்) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
- வேலூர்,அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.